(ஒன்பதாவது பாராளுமன்றம் — ஐந்தாவது கூட்டத்தொடர்)

**இல. 25.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2024 மே 22 புதன்கிழமை மு.ப. 9.30 மணிக்கு

## சமூகமளித்தோர்:

கௌரவ **மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

கௌரவ **அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

---

கௌரவ **தினேஷ் குணவர்தன,** பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

கௌரவ **மஹிந்த அமரவீர,** கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்

கௌரவ **டிரான் அலஸ்,** பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **(கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

கௌரவ **மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) ரமேஷ் பதிரண,** கைத்தொழில் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர்

கௌரவ **நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

கௌரவ **ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

கௌரவ **பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

கௌரவ **சனாதிபதி சட்டத்தரணி (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

கௌரவ **(திருமதி) சட்டத்தரணி பவித்ராதேவி வன்னிஆரச்சி,** வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர்

கௌரவ **விதுர விக்ரமநாயக,** புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

கௌரவ **கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

கௌரவ **சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

கௌரவ **ரன்ஜித் சியம்பலாபிடிய,** அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **திலும் அமுனுகம,** முதலீட்டு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(டாக்டர்) (திருமதி) சீதா அரம்பேபொல,** சுகாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **லசந்த அலகியவன்ன,** போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்

கௌரவ **(திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அ. அரவிந்த் குமார்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிறிபால கமலத்,** நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சிவநேசதுரை சந்திரகாந்தன்,** கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டி.வீ. சானக,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி சிசிர ஜயகொடி,** சுதேச வைத்திய இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பிரேமலால் ஜயசேக்கர,** துறைமுகங்கள் மற்றும் விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பிரமித்த பண்டார தென்னகோன்,** பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சாமர சம்பத் தசனாயக,** ஆரம்பக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பியல் நிசாந்த த சில்வா,** கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சட்டத்தரணி மொஹான் பிரியதர்ஷன த சில்வா,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **றோஹண திஸாநாயக்க,** விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அனுப பஸ்குவல்,** சமூக வலுவூட்டுகை இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அருந்திக்க பர்னாந்து,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

கௌரவ **அசோக்க பிரியந்த,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சாந்த பண்டார,** வெகுசன ஊடக இராஜாங்க அமைச்சர்

கௌரவ **தாரக்க பாலசூரிய,** வெளிநாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **விஜித பேருகொட,** பிரிவெனாக் கல்வி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கே. காதர் மஸ்தான்,** கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

கௌரவ **பிரசன்ன ரணவீர,** சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **சஷீந்திர ராஜபக்ஷ,** நீர்ப்பாசனம் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ஜானக வக்கும்புர,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

கௌரவ **ச. வியாழேந்திரன்,** வர்த்தக இராஜாங்க அமைச்சர்

கௌரவ **செஹான் சேமசிங்க,** நிதி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **இந்திக அனுருத்த ஹேரத்,** மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர்

கௌரவ **கனக ஹேரத்,** தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர்

கௌரவ **டீ. பி. ஹேரத்,** கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

---

**கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா**

கௌரவ கபில அதுகோரல

கௌரவ (திருமதி) சட்டத்தரணி தலதா அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ வஜிர அபேவர்தன

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ (கலாநிதி) மேஜர் பிரதீப் உந்துகொட

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ ஜயந்த கெட்டகொட

கௌரவ சட்டத்தரணி லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ வீரசேன கமகே

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ பழனி திகாம்பரம்

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த

கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன

கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த

கௌரவ அசங்க நவரத்ன

கௌரவ சு. நோகராதலிங்கம்

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ நிமல் பியதிஸ்ஸ

கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்

கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஜகத் பிரியங்கர

கௌரவ ரோஹண பண்டார

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்

கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப்

கௌரவ சட்டத்தரணி அநுர பிரியதர்ஷன யாபா

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ அலி சப்ரி ரஹீம்

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ காமினி வலேபொட

கௌரவ நயன வாசலதிலக

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி

கௌரவ சனாதிபதி சட்டத்தரணி ஜயந்த வீரசிங்க

கௌரவ டீ. வீரசிங்க

கௌரவ வீரசுமன வீரசிங்ஹ

கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ சிவஞானம் சிறீதரன்

கௌரவ ஜயந்த சமரவீர

கௌரவ மைத்ரீபால சிறிசேன

கௌரவ வடிவேல் சுரேஷ்

கௌரவ சட்டத்தரணி டப்ளியூ. டீ.ஜே. செனவிரத்ன

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ சமன்பிரிய ஹேரத்

**கௌரவ ஏ.எச்.எம். பௌஸி**

திருமதி குஷானி ரோஹனதீர, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. சமிந்த குலரத்ன, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. ஹன்ஸ அபேரத்ன, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சபாநாயகரின் அறிவித்தல்கள்:** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 'பால்நிலைசார் சமத்துவம்' எனும் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு (2) மனுக்களின் பிரதிகள் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன் ."

**II**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அநுராத ஜயரத்ன அவர்கள் 2024 மார்ச் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

**III**

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பிரசன்ன ரணதுங்க அவர்கள் 2024 பெப்ரவரி 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமை பற்றிய விடயம் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

2. **பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்**: (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்—

(i) 2022 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் நான்காவது தொகுதியின் XXVII ஆம் பகுதியையும்; மற்றும்

(ii) 2023 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் முதலாவது தொகுதியின் II ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து, அவ்வறிக்கை தேசிய பொருளாதார மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 7(3), 8, 10, 11 மற்றும் 12 ஆம் பிரிவுகள் மற்றும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 44(3) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைகள் தொடர்பில் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட 2024 ஏப்ரல் 29 ஆம் திகதிய 2382/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளை சமர்ப்பித்து, அவ்வொழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 1979 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, அத்தியாவசிய பொதுமக்கள் சேவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, 2024 மே 21 ஆம் திகதிய 2385/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் அதன் அட்டவணையில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தை சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான இலங்கை பௌத்த மற்றும் பாளி பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து, அவ்வறிக்கை கல்வி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2022 ஆம் ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து, அவ்வறிக்கை உணவுப் பாதுகாப்பு மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பித்து, அவ்வறிக்கைகள் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்:** (1) சட்டவாக்க நிலையியற் குழுவின் தவிசாளர் பிரதிச் சபாநாயகர் கௌரவ அஜித் ராஜபக்ஷ "மாத்தறைப் பருவம் அமைப்பு (கூட்டிணைத்தல்)" எனும் சட்டமூலம் பற்றிய சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையையும் அதன் கூட்ட அறிக்கையையும் சமர்ப்பித்தார்.

சட்டமூலம் சட்டவாக்க நிலையியற் குழுவினால் அறிக்கையிடப்பட்டவாறு 2024 யூன் 04 செவ்வாய்க்கிழமை பரிசீலிக்கப்படுமாக.

(2) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்திச் சட்டத்தின் பிரிவு 33 இன் கீழான தீர்மானம் தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) பதுளை, கைலகொட, ஸ்ரீ ரதனபால மாவத்தை, இல. 10/ஏ யில் வதியும் திரு. ஜே.எம். சேனாதீரவினது 2024.03.25 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாமர சம்பத் தசநாயக்க சமர்ப்பித்தார்.

(2) அம்பலன்கொட, ரன்தொம்பே, கெப்பூ எல வீதி, இல. 29 இல் வதியும் திரு. ஜே.சீ. சஞ்ஜீவவினது 2024.03.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சட்டத்தரணி சந்திம வீரக்கொடி சமர்ப்பித்தார்.

(3) ஹல்தும்முல்ல, சிங்கள வித்தியாலத்திற்கு அருகாமையில் வதியும் திரு. நிமல் சதரசிங்கவினது 2023.10.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சாரதீ துஷ்மந்த சமர்ப்பித்தார்.

(4) மஹரகம, நாவின்ன, ஸ்ரீ தேவானந்த வீதி, இல. 67 இல் வதியும் திரு. கே.டி.ஏ. பிரியந்த ஜயசுந்தரவினது 2023.12.28 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல் சமர்ப்பித்தார்.

(5) வீரகொட, திகாமடுல்ல, சந்தனபுர, இல. 17/54/02 இல் வதியும் திருமதி எச்.கே.டப்ளியூ. லக்சிகா குமாரியினது 2024.01.03 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ டீ. வீரசிங்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**5. பகிரங்க நிதிசார் முகாமைத்துவம்:** நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — சிறந்த பேரினப்பொருளாதார முகாமைத்துவத்துக்காக நிதிக் கொள்கையை மேம்படுத்தும் நோக்குடன் பகிரங்க நிதிசார் முகாமைத்துவக் கட்டமைப்பில் பகிரங்க நிதிகளின் பொறுப்புக்கூறுதுல், மேற்பார்வை செய்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் என்பனவற்றை வலுப்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; நிதிசார் முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட நிறுவனஞ்சார் பொறுப்புக்களை தெளிவுபடுத்துவதற்கும்; வரவு செலவுத்திட்ட முகாமைத்துவத்தினை வலுப்படுத்துவதற்கும், நிதிக் கொள்கை மற்றும் நிறைவேற்றத்தின் பொதுமக்கள் நுனித்தாராய்வினை வசதிப்படுத்துவதற்கும்; 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் பாகம் II இன் 8 ஆம் மற்றும் 14 ஆம் பிரிவுகளை நீக்குவதற்கும்; 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைததுவ (பொறுப்பு) சட்டத்தினை நீக்குவதற்கும் அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 யூன் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பொருளாதார நிலைமாற்றம்:** நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம் — பொருளாதார நிலைமாற்றம் மீதான தேசியக் கொள்கைக்கான ஏற்பாட்டைச் செய்வதற்கும், இலங்கை பொருளாதார ஆணைக்குழு, இலங்கை முதலீட்டு வலயங்கள், சர்வதேச வியாபாரத்திற்கான அலுவலகம், தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழு, இலங்கைப் பொருளாதார மற்றும் சர்வதேச வியாபாரத்திற்கான நிறுவகம் ஆகியவற்றை தாபிப்பதற்கும், 1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபை சட்டத்தை நீக்கஞ் செய்வதற்கும், அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான எல்லாக் கருமங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கானதொரு சட்டமூலம்.

இச் சட்டமூலம் 2024 யூன் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படும் என்றும் இச் சட்டமூலம் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 1):** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.00 மணி முதல்

பி.ப. 5.30 மணி வரை இருக்குமாக. மு.ப. 9.45 மணிக்கு பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8(5) தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. பாராளுமன்ற அமர்வுகள் (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் சார்பாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பின்வருமாறு பிரேரித்தார்,— இப்பாராளுமன்றம் இன்று அதன் அமர்வு கலையும் போது 2024 யூன் 04 ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை ஒத்திவைக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 1):** "இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே பிரேரித்தார். அதனை கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**10. சட்டமூலம் கொண்டுவர அனுமதி (இல. 2):** "1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்" எனும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக என கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே பிரேரித்தார். அதனை கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமையச் சட்டமூலம் முதலாவது முறையாக மதிப்பிடப்பெற்று அச்சிடப்பட வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

52 (6) ஆம் இலக்க நிலையியற் கட்டளைக்கமைய அறிக்கையிடுவதற்காக சட்டமூலம் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரின் கவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டது.

**11. ஒத்திவைப்பு (சட்டவாட்சியை நிறுவி ஊழலற்ற நாட்டை உருவாக்கல்):** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

"கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்குவாராக" என போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.10.58 மணிக்கு கௌரவ ஹேஷா விதானகே தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்குவாராக” என அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் மற்றும் நிதி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.11.08 மணிக்கு கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்கினார்.)

“கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக” என நிதி இராஜாங்க அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(மு.ப.11.58 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்குவாராக” என கௌரவ கபீர் ஹஷீம் பிரேரிக்க அதனை கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம் அனுவதித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 12.39 மணிக்கு கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன தலைமை தாங்கினார்.)

“கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்குவாராக” கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.41 மணிக்கு கௌரவ சட்டத்தரணி எஸ். எம். எம். முஸ்ஸாரப் தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்குவாராக” கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.49 மணிக்கு கௌரவ ஜகத் சமரவிக்ரம தலைமை தாங்கினார்.)

அவ்வேளை கூட்ட நடப்பெண்ணின்மை அவதானிக்கப்பட்டு பாராளுமன்றம் எண்ணப்பட்டது. கூட்ட நடப்பெண் காணப்படாமையால், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 11 இற்கமைய சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் பி.ப. 4.25 மணிக்கு 2024 யூன் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப. 9.30 மணி வரை பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைத்தார்.